07.08.2026

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.</u>

<u>அசல் வழக்கு எண்.**143/2020**</u>

<u>வா.சா. **2-**ரமேஷ், த/பெ. லெட்சுமணன்</u>

<u>சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது</u>

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் வாதி ஜானகியின் மகன் ஆவேன். இவ்வழக்கு விவரங்கள் எனக்கு தெரியும். நான் அம்மம்பாளையம் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன். வழக்கு சொத்தினை என் தாயார் 10.03.1975 ஆண்டு கிரையம் வாங்கினார். அந்த கிரையப்பத்திரத்தை நான் படித்து பார்த்துள்ளேன். அந்த கிரைய பத்திரம் வா.சா.ஆ.1 ல் தாவா சொத்து சர்வே நெம்பரில் கிழமேல் காலடி 22 தென்வடல் 69 காலடி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் தான் என் தாயார் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். வாதியின் வழக்குரை சொத்து விவரத்தில் வா.சா.ஆ.1 கிரையாவணத்தில் சொல்லப்பட்ட சொத்து அளவுகள் சொல்லப்படவில்லை என்று சொன்னால் வெவ்வேறு மாதிரி தான் உள்ளது எனக்கு சரியாக புரியவில்லை. என்னுடைய தாயார் வாதி ஜானகி அவருடைய கிரையப்பத்திரமான வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு கட்டுப்பட்ட சொத்திற்கு இவ்வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான்கெல்லை வழக்கு சொத்து விவரத்திலும், வா.சா.ஆ.1 ஆவணத்திலும் ஒன்றாக தான் உள்ளது.

வா.சா.ஆ.1 கிரையாவணத்தில் சொத்து விவரத்தில் நான்கெல்லை விவரத்தில் வடக்கு திசையில் கிழமேல் சக்கிலியர் தண்ணீர் எடுக்க போகும் கிழமேல் சந்து நடபாதை என குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரை சொத்து விவரத்தில் வடக்கு திசையில் கிழமேல் வீதிக்கு வடக்கு என குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரதிவாதியின் தாத்தா பாட்டி என பெருமாள், சுப்பம்மாள் ஆகியோருக்கு தாவா சொத்தை எந்த ஆண்டு என் தாயார் குடியிருக்க அனுமதித்தார் என்றால் 2000 ம் ஆண்டு. நான் தாக்கல் செய்த முதல் நிரூபண வாக்குமூலத்தில் 2011 ம் ஆண்டு பிரதிவாதியின் தாத்தா பாட்டியை காலிசெய்து விட்டோம் என குறிப்பிட்டுள்ளோம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்திற்கு 2011 ம் ஆண்டிற்கு பிறகு என் தாயார் பெயரில் பட்டா இருந்ததா என்றால் தகவல் அறியும் உரிமை சட்டத்தில் 2000 ம் ஆண்டு வரை என் தாயார் பெயரில் இருந்ததாகவும், அதன்பிறகு பெயர் மாற்றப்பட்டதாக தாசில்தார் பதில் அளித்திருந்தார். 2000 ம் ஆண்டு என் தாயார் பெயரில் உள்ள பட்டா ஆவணத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. 2013 ம் ஆண்டு நான் தாவா சொத்தை சுத்தம் செய்யும் போது பிரதிவாதிகள் தொந்தரவு செய்தார்கள்.

பிரதிவாதி இளமாறன் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை படித்து பார்த்துள்ளேன். அந்த இளமாறன் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் இளமாறனின் தாத்தா பாட்டி சுப்பம்மாள் பெயரில் பட்டா உள்ளதால் இருவரும்

சேர்ந்து செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதிவைத்தார்கள் என்று சொன்னால் சரிதான். 2013ம் ஆண்டில் தான் இந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை பற்றி எனக்கு தெரியவந்தது. 2013ம் ஆண்டு முதல் இவ்வழக்கு தாக்கல் செய்யும் வரை அந்த தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் ஆர்டிஓ விடம் மனு செய்து பட்டாவை ரத்து செய்ய கோரினோம், அவர் உரிய நீதிமன்றத்தை அணுகி செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய சொன்னார் அதன் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்தோம். வா.சா.ஆ.7 ஆர்டிஓ உத்தரவில் அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய அறிவுறுத்தியவாறு வாசகங்கள் இல்லை என்று சொன்னால் சரியல்ல உரிய நீதிமன்றத்தை அணுகுமாறு சொன்னார். இந்த உத்தரவு வா.சா.ஆ.7 2014ம் ஆண்டு போடப்பட்டது. ஆர்டிஓ உத்தரவு வா.சா.ஆ.7 பிறப்பிக்கும் வரை தாவா சொத்தில் யாரும் குடியிருக்கவில்லை, ஆனால் எங்களுடைய கண்காணிப்பில் தான் இருந்தது.

தாவா சொத்து என் தாயார் கிரையம் வாங்கிய 1975ம் ஆண்டு முதல் 2011 வரை தாவா சொத்தில் நாங்கள் தான் குடியிருந்தோம் என்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என் தாயார் இவ்வழக்கில் பெருமாள் மற்றும் சுப்பம்மாள் பெயரில் வீட்டுவரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். இவ்வாறு பெருமாள், சுப்பம்மாள் பெயரில் உள்ள

வீட்டுவரி ரசீது எந்த ஆண்டிற்கானது என்று எனக்கு தெரியாது. 1975 ம் ஆண்டு என் தாயார் வாங்கிய கிரைய சொத்து நத்தம் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்த முதன்மை நிரூபண வாக்குமூலத்தில் பெருமாள், சுப்பம்மாள் குடியிருக்கும் வீடு புறம்போக்கு என குறிப்பிட்டு அவர்கள் பெயரில் மின்இணைப்பு பெற்றிருக்கிறார்கள் என குறிப்பிட்டுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். 2013 ம் ஆண்டு இந்த மின்இணைப்பை ரத்து செய்யக்கோரி மனு கொடுத்தேன். அவ்வாறு மின்இணைப்பு ரத்து செய்ய நாங்கள் மேற்கொண்ட நடவடிக்கையை பொறுத்து எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. 1982 முதல் தாவா சொத்தை பொறுத்து பெருமாள், சுப்பம்மாள், இளமாறன் ஆகிய பிரதிவாதிகள் பெயரில் தான் வீட்டுவரி மற்றும் மின்கட்டணவரி செலுத்தப்பட்டு வருகிறது என்று சொன்னால் சரிதான், ஆனால் அது எங்களுக்கு தெரியாமல் போய்விட்டது. தாவா சொத்து பெருமாள், சுப்பம்மாள் எழுதிவைத்த தானசெட்டில்மெண்ட் ஆவணம் படி பிரதிவாதி இளமாறனுக்கு தான் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. என் தாயார் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/-திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.